**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 195/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | பால்ராஜ், வயது 37 |
| Father Name/Husband Name | : | சுப்புராஜ் |
| Village | : | ஜமீன்தேவர்குளம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of August 2026.

**(Accused present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2026 ஆம் தேதி கோவில்பட்டி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காலை 14.00 மணியளவில் நான், 1623 ஜெயபிரகாஷ் மற்றும் தலைமை காவலர் 1269 சுரேந்தர் ஆகியோர் சகிதம் கயத்தார் சிவநாராயணன் மண்டபம் அருகே ரோந்து செய்து கண்காணித்து வந்த போது வேலுசாமி, த.பெ. முத்துராமலிங்கம் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 650 ML அளவு கொண்ட King fisher beer பாட்டில்கள் 13 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பீர் பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் 14.30 மணியளவில் நிலைய குற்ற எண். 37/2026 U/s 4(1)(a) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய மேற்படி தலைமை காவலர்

சுரேந்தருக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் முருகதாஸ் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3 நாங்கள் பொதுவாக காலையில் 07.00 மணிக்கு ரோந்து பணியை தொடங்கி விடுவோம் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் முதலில் எந்த இடத்திற்கு ரோந்து சென்றீர்கள் என்றால் கோவில்பட்டி சுற்று வட்டார பகுதிக்கு ரோந்து சென்றோம். அந்த பகுதியில் ரோந்து செல்வதற்கு 2 மணி நேரம் ஆகுமா என்றால் ஆகும். ஜெயபிரகாஷ் என்பவர் எங்களது காவல் நிலையத்தில் எழுத்தராக உள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவ இடத்திற்கு ரோந்து சென்றபோது மது விற்பனை நடந்து கொண்டிருக்கவில்லை என்றால் சரிதான், எதிரி விற்பனைக்காக மது பாட்டில்கள் வைத்து கொண்டிருந்தார்.

4 எதிரி மது பாட்டில்களை விற்றதாக நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சிவநாராயண திருமண மண்டபம் என்பது எப்போதும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது 15 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரியாக தெரியவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால்தான் அது குறித்து எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்து பணி சென்றதற்கு எங்களுக்கு பாக்கெட் டைரி உண்டு, அதை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து கைப்பற்றபட்டதற்கு காவல் நிலையத்தில் தனிஅறிக்கை கொடுக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 16.30 மணி இருக்கும். அதில் நானும், மற்றொரு காவலரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்து எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.